ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
தொலைபேசி : 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
| திகதி | 2019.01.21 |

## 2018 திசெம்பரில் பணவீக்கம் குறைவடைந்தது

**முதன்மைப் பணவீக்கம்**

ஆண்டிற்கு ஆண்டுப் பணவீக்கம் : 0.4%

ஆண்டுச் சராசரிப் பணவீக்கம்: 2.1%

மாதாந்தச் சதவீத மாற்றம்: -0.5%

**மையப் பணவீக்கம்**

ஆண்டிற்கு ஆண்டுப் பணவீக்கம்: 3.1%

ஆண்டுச் சராசரிப் பணவீக்கம்: 2.4%

மாதாந்தச் சதவீத மாற்றம்: 0.0%

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (தேநுவிசு, 2013=100)[1] ஆண்டுக்கு ஆண்டு மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறான முதன்மைப் பணவீக்கம் 2018 நவெம்பரில் பதிவுசெய்யப்பட்ட 1.0 சதவீதத்திலிருந்து திசெம்பரில் 0.4 சதவீதத்திற்குக் குறைவடைந்தது. திசெம்பர் 2018இல் ஆண்டுக்கு ஆண்டு பணவீக்கத்தில் அவதானிக்கப்பட்ட குறைவானது உணவு மற்றும் உணவல்லாத வகைகள் இரண்டிலுமுள்ள பொருட்கள் மற்றும் சேவைகள் விலைகளின் குறைவினால் உந்தப்பட்டது. ஆண்டுக்கு ஆண்டு உணவுப் பணவீக்கம் 2018 நவெம்பரில் பதிவுசெய்யப்பட்ட -3.9 சதவீதத்திலிருந்து 2018 திசெம்பரில் -4.5 சதவீதத்திற்கு குறைவடைந்திருந்த வேளையில் ஆண்டுக்கு ஆண்டு உணவல்லாப் பணவீக்கமானது 2018 நவெம்பரின் 5.2 சதவீதத்திலிருந்து 2018 திசெம்பரில் 4.7 சதவீத்திற்கு குறைவடைந்தது.




ஆண்டுச் சராசரி அடிப்படையில் அளவிடப்படுகின்ற தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் மாற்றம் 2018 நவெம்பரின் 2.7 சதவீதத்திலிருந்து 2018 திசெம்பரில் 2.1 சதவீதத்திற்கு குறைவடைந்தது.

மாதாந்த மாற்றங்களைக் கருத்திற்கொள்ளும் போது தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் -0.5 சதவீதமாக 2018 திசெம்பரில் காணப்பட்டது. இதற்கு பிரதானமாக உணவல்லா வகையிலுள்ள பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் குறைவடைந்திருந்தமை காரணமாவதோடு, இவ்வகையில்

[1] தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (2013=100) தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தொகுக்கப்பட்டதாகும்.

போக்குவரத்து துணை வகையானது (பெற்றோல், டீசல் மற்றும் பேருந்துக் கட்டணம்) உயர்ந்த அளவிலான குறைவினைப் பதிவுசெய்தது.

மேலும், தொடர்பூட்டல், வெறியக்குடிவகைகள் மற்றும் புகையிலை துணை வகைகளிலுள்ள பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் மாதகாலப்பகுதியில் குறைவினைப் பதிவுசெய்தன. அதேவேளையில், உணவு வகையிலுள்ள பொருட்களின் விலைகள் குறைவினைப் பதிவுசெய்ததோடு, இவ்வகையில் மரக்கறிகள், எலுமிச்சை, பெரிய வெங்காயம், வாழைப்பழம் மற்றும் தேங்காய்கள் ஒரு முக்கியமான குறைவினைப் பதிவுசெய்தன.

பொருளாதாரத்தின் அடிப்படைப் பணவீக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற மையப் பணவீக்கமானது ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 2018 திசெம்பரில் 3.1 சதவீதத்திலேயே காணப்பட்டது. இதேவேளையில், ஆண்டுச் சராசரி மையப் பணவீக்கம், 2018 திசெம்பரில் 2.4 சதவீதத்தில் மாற்றமின்றிக் காணப்பட்டது.

**தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அசைவுகள்**

**தளம் : 2013 = 100**

| ஆண்டு | மாதம் | சுட்டெண் | | மாதாந்தச் சதவீத மாற்றம் | | ஆண்டிற்கு ஆண்டு சதவீத மாற்றம் | | ஆண்டுச் சராசரி சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | தேநுவி சுட்டெண் | தேநுவிசு (மைய) | தேநுவி சுட்டெண் | தேநுவிசு (மைய) | தேநுவி சுட்டெண் | தேநுவிசு (மைய) | தேநுவி சுட்டெண் | தேநுவிசு (மைய) |
| 2017 | சனவரி | 119.3 | 121.4 | 1.1 | 0.7 | 6.5 | 7.1 | 4.6 | 6.2 |
| | பெப்புருவரி | 119.9 | 122.0 | 0.5 | 0.5 | 8.2 | 7.1 | 5.1 | 6.4 |
| | மாச்சு | 119.5 | 122.3 | -0.3 | 0.2 | 8.6 | 7.0 | 5.6 | 6.6 |
| | ஏப்பிறல் | 121.0 | 122.5 | 1.3 | 0.2 | 8.4 | 5.9 | 6.0 | 6.6 |
| | மே | 121.8 | 123.0 | 0.7 | 0.4 | 7.1 | 4.7 | 6.1 | 6.4 |
| | யூன் | 123.4 | 123.1 | 1.3 | 0.1 | 6.3 | 4.1 | 6.1 | 6.1 |
| | யூலை | 122.4 | 122.9 | -0.8 | -0.2 | 6.3 | 4.2 | 6.2 | 5.9 |
| | ஓகத்து | 122.3 | 123.0 | -0.1 | 0.1 | 7.9 | 4.8 | 6.5 | 5.8 |
| | செத்தெம்பர் | 123.3 | 123.1 | 0.8 | 0.1 | 8.6 | 4.6 | 6.8 | 5.7 |
| | ஒத்தோபர் | 124.8 | 123.1 | 1.2 | 0.0 | 8.8 | 4.1 | 7.1 | 5.6 |
| | நவெம்பர் | 126.4 | 123.8 | 1.3 | 0.6 | 8.4 | 2.8 | 7.5 | 5.2 |
| | திசெம்பர் | 126.6 | 123.8 | 0.2 | 0.0 | 7.3 | 2.7 | 7.7 | 4.9 |
| 2018 | சனவரி | 125.8 | 123.9 | -0.6 | 0.1 | 5.4 | 2.1 | 7.6 | 4.5 |
| | பெப்புருவரி | 123.7 | 124.4 | -1.7 | 0.4 | 3.2 | 2.0 | 7.2 | 4.1 |
| | மாச்சு | 122.8 | 124.6 | -0.7 | 0.2 | 2.8 | 1.9 | 6.7 | 3.6 |
| | ஏப்பிறல் | 122.9 | 124.8 | 0.1 | 0.2 | 1.6 | 1.9 | 6.1 | 3.3 |
| | மே | 124.3 | 125.1 | 1.1 | 0.2 | 2.1 | 1.7 | 5.7 | 3.1 |
| | யூன் | 126.5 | 125.3 | 1.8 | 0.2 | 2.5 | 1.8 | 5.3 | 2.9 |
| | யூலை | 126.6 | 125.7 | 0.1 | 0.3 | 3.4 | 2.3 | 5.1 | 2.7 |
| | ஓகத்து | 125.4 | 126.3 | -0.9 | 0.5 | 2.5 | 2.7 | 4.7 | 2.5 |
| | செத்தெம்பர் | 124.4 | 126.9 | -0.8 | 0.5 | 0.9 | 3.1 | 4.0 | 2.4 |
| | ஒத்தோபர் | 124.9 | 127.3 | 0.4 | 0.3 | 0.1 | 3.4 | 3.3 | 2.4 |
| | நவெம்பர் | 127.7 | 127.6 | 2.2 | 0.2 | 1.0 | 3.1 | 2.7 | 2.4 |
| | திசெம்பர் | 127.1 | 127.6 | -0.5 | 0.0 | 0.4 | 3.1 | 2.1 | 2.4 |

மூலம்: தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்